என்று 750 பேர் உள்ள இடங்களுக்குப் போட்டு, அதனால் ரூ. 400, 500 என்று சம்பளம் கொடுப்பதைவிட அடுத்த கிராமத்தையும் சிறிய கிராமமாக இருந்தால் சேர்த்துவிட்டால், எதிர் காலத்தில் முன்னேடியாக இதுபோன்ற காரியங்கள் செய்ய அடிகோலியதாக இருக்குமாதலால் அதற்கு வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நல்ல யோசனை. அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Attack on a Revenue Inspector

*147 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether any Revenue Inspector was stabbed in Uttamapalayam taluk of Madurai district in November 1968 and admitted into the Madurai Hospital; and

(b) whether it is a fact that he was stabbed as a result of his over enthusiastic checking of rice smugglers?

ரெவின்யு இன்ஸ்பெக்டர் தாக்கப்பட்ட சம்பவம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட உத்தமபாளையத்தில் 1968 நவம்பரில் ரெவின்யு இன்ஸ்பெக்டர் ஒருவர் குத்தப்பட்டு மதுரை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாரா?

(இ) அரிசிக் கடத்தல்காரர்களை அதிகமாக கண்காணித்ததின் காரணமாக அவர் குத்தப்பட்டார் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம். உத்தமபாளையம் கடத்தல் தடுப்பு தனி வருவாய் ஆய்வாளர் திரு. பாண்டியன் என்பவர் 5—11—1968-ம் நாள் இரவு 3-30 மணி அளவில் கத்தியால் குத்தப்பட்டு முதலில் உத்தமபாளையம் அரசாங்க மருத்துவ மனையில் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டார். பின்னர் 6—11—1968-ம் நாள் மதுரை எர்ஸ்க்கின் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார்.

(இ) ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, எங்கள் ஜில்லாவில் மட்டுமல்ல, கேரள எல்லையோரப் பகுதியில் இப்படிப் பட்ட சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. கடத்தல் காரர்கள் கட்டுப்பாடாகச் சேர்ந்துகொண்டு ஆயுத பாணிகளாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அங்கே போலீஸ் பந்தோபஸ்து

[7th March 1969

சரியாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆகையால் அங்கே சரியான பந்தோபஸ்து போட்டு உத்தியோகஸ்தர்களுக்குப் பாதுகாப்பு தரும் நிலையை அரசு உண்டாக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதிகாரிகளுக்குப் பந்தோபஸ்து நிச்சயமாகக் கொடுக்கப்படும். இப்படி மதுரையிலிருந்து தேனீ வழியாக உத்தமபாளையம், கம்பம், கடலூர் வழியாக கடத்தல் செய்யப்படுகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து அதற்கான கண்காணிப்பு செய்யப்படுகிறது. கூடுதலான கண்காணிப்பு வேண்டுமானாலும் செய்யலாம்.

Movement of Millets

*148. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether there is any ban on the free movement, within the district, of the dry crops produced by the agriculturists in their lands for selling them; and

(*b*) the reason for launching a prosecution in Usilampatti Sub-Divisional Magistrate's Court against one Gurunathan, a resident of Aranmanaipudur of Koduvilarpatti village adjoining Theni in Madurai district, after seizing 40 bags of ragi from him?

புஞ்சை தானிய போக்குவரத்து

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் புஞ்சை தானியங்களை ஜில்லாவுக்குள் எங்கும் கொண்டு போய் விற்க தடை இருக்கிறதா?

(இ) மதுரை மாவட்ட தேனீயை அடுத்த கொடுவிலார்பட்டி கிராமம் அரண்மனைபுதூர் என்னும் ஊர்வாசியான குருநாதன் என்பவரின் கேப்பை மூட்டை 40-ஐப் பிடித்து பறிமுதல் செய்து உசிலம்பட்டி எஸ். டி. எம். கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்ட காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) தற்போது இல்லை. 1956-ம் வருடத்திய சென்னை புஞ்சை தானியங்கள் போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு, 9—12—1966 அன்று செல்லுபடியற்றதாகி விட்டது.

(இ) 1966-ம் வருடத்திய சென்னை புஞ்சை தானியங்கள் போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு அமுலில் இருந்த பொழுது, மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம், தேனீயைச் சேர்ந்த அரண்மனைப்புதூர் கிராமம் திரு. குருநாதன் என்பவர் தமக்குச் சொந்தமான 34.45 குவிண்டால் எடையுள்ள 45 மூட்டை